தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஜய, மாசி 6, திருவள்ளுவர் ஆண்டு – 2046

2015 பிப்ரவரி 18, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று."

இனிமையான சொற்கள் இருக்க அவற்றைச் சொல்லாமல் கடுமையான சொற்களைச் சொல்வது பழத்தை விடுத்து காயைப் பறித்து உண்பதற்கு ஒப்பாகும்.

1. இரங்கற்குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. தொ.க. சிறைமீட்டான் அவர்கள் 8-12-2014 அன்றும், திரு. ப. முத்துசாமி அவர்கள் 18-12-2014 அன்றும், திரு. கே. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 22-12-2014 அன்றும், திரு. பொ. உத்திராபதி அவர்கள் 27-1-2015 அன்றும், திரு. ரா.க.சு. தண்டபாணி அவர்கள் 10-2-2015 அன்றும் மற்றும் திரு. மா. சீரங்கன் அவர்கள் 13-2-2015 அன்றும் மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. தொ.க. சிறைமீட்டான் அவர்கள் 1967 முதல் 1971 வரையிலும் மற்றும் 1971 முதல் 1976 வரையிலும் இரண்டு முறை பரமக்குடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றினார்கள்.

[பேரவைத் தலைவர்] [2015 பிப்ரவரி 18

திரு. ப. முத்துசாமி அவர்கள் 1971 முதல் 1976 வரையிலும் மற்றும் 1989 முதல் 1991 வரையிலும், இரண்டு முறை வேடசந்தூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றினார்கள்.

திரு. கே. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 1967 முதல் 1971 வரை பழனி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பான முறையில் பணியாற்றினார்கள்.

திரு. பெ. உத்திராபதி அவர்கள் 1977 முதல் 1980 வரையிலும், 1980 முதல் 1984 வரையிலும் மற்றும் 1985 முதல் 1988 வரையிலும் மூன்று முறை திருத்துறைப்பூண்டி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றினார்கள்.

திரு. ரா.க.சு. தண்டபாணி அவர்கள் 1977 முதல் 1980 வரை காங்கேயம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு திறம்படப் பணியாற்றினார்கள்.

திரு. மா. சீரங்கன் அவர்கள் 1989 முதல் 1991 வரை மேட்டூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 1, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன்,

2015 பிப்ரவரி 18]
மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

1—

காற்றாலை மின் உற்பத்தி

***26493—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டத்தில் காற்றாலை மின் உற்பத்தி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டத்தில் காற்றாலை மின் உற்பத்தி செய்வதற்கான விண்ணப்பம் தக்க ஆவணங்களுடன் தனியார் முனைவோர்களிடம் இருந்து பெறப்பட்டால், அதற்கான உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

*மேலும், காற்று சக்தி ஆற்றல் அளவை மதிப்பீடு செய்யும்பொருட்டு, புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் மற்றும் காற்று சக்தி தொழில்நுட்பவியல் மையம்-*Centre for Wind Energy Technology *ஆகியவை இணைந்து காற்று சக்தி கண்காணிப்பு நிலையம்-*Wind Energy Monitoring Station *ஒன்றை சிவகங்கை மாவட்டம், கீரணைப்பட்டியில் 26-12-2013 அன்று செயல்நிலைப்படுத்தி அதன்மூலம் காற்றின் வேகம், திசை, அழுத்தம் ஆகிய விவரங்கள் தொடர்ந்து சேகரிக்கப்பட்டு வருகின்றன. சேகரிக்கப்படும் தேவையான தொடர் விவரங்கள், இரண்டு காற்று பருவங்களுக்கு* (two wind seasons) *கிடைக்கப் பெற்றவுடன், அவ்விடத்தின் காற்று சக்தி ஆற்றல் அறியப்பட்டு, காற்றாலை அமைப்பது குறித்த முடிவுகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

11-564—2

[2015 பிப்ரவரி 18

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.*

திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் மக்களின் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். 67 ஆம் பிறந்த நாளில், உலகத் தமிழர்களின் ஒப்பற்றத் தலைவராக விளங்கிக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்கள், தனது 67-வது வயது மட்டுமல்லாமல், இந்த உலகம் இருக்கும்வரை வாழ்ந்து தமிழக மக்களைக் காப்பாற்ற (மேசையைத் தட்டும் ஒலி) இறைவனை வேண்டுகிறேன். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள்மீது சில கயவர்களின் வஞ்சக சூழ்ச்சியால் ஏற்பட்டு, மக்களால் விரும்பப்படாத, நடந்து முடிந்த, ஸ்ரீரங்கம் சட்டமன்ற இடைத் தேர்தலில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசிபெற்ற வேட்பாளர் அருமை சகோதரி எஸ். வளர்மதி அவர்களுக்குப் பதியப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 51 ஆயிரத்து 561 ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) அதிகப்படியான வாக்குகள் பெற்று, இந்த உலகமே வியக்கத்தக்க அளவிற்கு வெற்றியைப் பெற்றிருக்கின்ற அன்புச் சகோதரி அவர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வெற்றியை மாண்புமிகு அம்மா அவர்களுக்குக் காணிக்கையாக்குகிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் என்னும் சதுரங்கத்தில் வெற்றிகளைப் பெற்றெடுத்த அன்னையே! கழகத்தைத் தாங்கி நிற்கும் இரும்புத் தூணே! களங்கமில்லா காவியத் தலைவியே! கழகத்தைக் காக்கும் கண்ணின் சுடரே! மக்கள் போற்றும் மகா தீபமே! கயவர்களுக்கு அஞ்சாத காவியத் திலகமே! குட்டிச் சாத்தான்களின் குளறுபடிகளை உடைத்தெறிந்து, குடும்ப ஆட்சியை கும்மிருட்டில் தள்ளி தமிழகத்தைக் காக்கும் தெய்வமே! (மேசையைத் தட்டும் ஒலி) மஞ்சள் மாமுனியை மண்டியிடச் செய்தவரே, எங்கள் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம் ஒரு வறட்சியான மாவட்டம்; காடுகளை அதிகம் கொண்ட மாவட்டம்; அரசு நிலங்கள் அதிகமாக உள்ள

மாவட்டம். இந்த மாவட்டத்தில் காற்றாலை மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்படும்போது, சிவகங்கை மாவட்டத்திற்குத் தேவையான மின்சாரத்தைப் பெறுவதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. ஆகவே, சிவகங்கை மாவட்டத்தில் அரசின் மூலமாக ஒரு காற்றாலை மின் உற்பத்தி நிலையம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக காற்றாலை மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்பட வேண்டுமென்று சொன்னால், அந்தப் பகுதியிலே காற்றின் வேகம், அழுத்தம், திசை ஆகியவை கண்டறியப்பட வேண்டும். அந்த ஆய்வுகளின் அடிப்படையில், தொழில்நுட்ப ரீதியாக அந்தப் பகுதி காற்றாலை அமைப்பதற்குச் சாதகமாக இருந்தால், தனியார் நிறுவனங்களே போட்டி போட்டுக்கொண்டு காற்றாலை அமைப்பதற்கு முன்வருவார்கள். எங்கெங்கெல்லாம் காற்றாலை மின் நிலையங்கள் அமைப்பதற்கு வாய்ப்புகள் இருக்கின்றனவோ, அந்தப் பகுதிகளிலெல்லாம் தனியார் நிறுவனங்கள்மூலம் அமைத்து வருகின்றார்கள்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், இந்தியாவிலேயே காற்றாலை மின் உற்பத்தியில், மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு (மேசையைத் தட்டும் ஒலி) நடைபெறுகின்ற இந்த மாநில அரசுதான் முதல் இடத்தைப் பெற்றுள்ளது. சமீபத்தில், இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்புகூட மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் விருதினை வழங்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே காற்றாலை மின் உற்பத்தியில் மட்டுமல்லாமல், புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் முதன்மை மாநிலம் என்கிற நிலையை நாம் எட்டியிருக்கிறோம். காற்றாலை மின் உற்பத்தியில் இதுவரை நாம் எட்டியிருக்கிற மின்சார நிறுவுதிறன் 7,391.25 மெகா வாட். அதேபோல, காற்றாலையைத் தவிர, புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையின் மற்ற பிரிவுகளான சூரியஒளி மின்சக்திமூலம் 119.06 மெகா வாட், தாவரக் கழிவுகள்மூலம் (Bio-mass) 228 மெகா வாட், இணை மின் உற்பத்தியில் (Co-generation) 659.4 மெகா

வாட், ஆக மொத்தம், 8397.71 மெகா வாட் மின்சாரம் பெறப்படுகிறது. புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்திமூலம் தமிழ்நாடு மின்சார உற்பத்தியை அதிகமாக்கி சாதனையைப் புரிந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சாதனைகளுக்கெல்லாம் முழுமுதற்காரணமாக விளங்கிக் கொண்டிருக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குத்தான் இந்த விருதினைப் பெற்றதற்கு நன்றியினைச் சொல்ல வேண்டும். மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த தொடர் முயற்சியின் காரணமாகவும், விடா முயற்சியின் காரணமாகவும் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சாதனை எட்டப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

சிவகங்கை மாவட்டத்தைப் பொறுத்தளவில், கிரணைப்பட்டியில் இப்போது காற்றாலை ஆய்வு மையம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்தக் காற்றாலை ஆய்வு மையத்தை இரண்டு ஆண்டுகள் ஆய்வு செய்ய வேண்டும். ஓர் ஆண்டு மட்டும் ஆய்வு செய்தால் முழுமையான செய்தி நமக்குக் கிடைக்காது. ஏனென்றுசொன்னால், ஒரு மெகா வாட் உற்பத்திக்கு ஏறத்தாழ 7 கோடி ரூபாயை முதலீடு செய்கின்ற தனியார்களுக்கு அது பயனுள்ளதாக அமைய வேண்டுமென்று சொன்னால், அந்தப் பகுதியிலே காற்றாலைமூலம் மின் உற்பத்தி எந்த அளவுக்குக் கிடைக்கும் என்பதை ஆய்வு செய்ததற்குப் பின்னர்தான் அவர்கள் முதலீடு செய்ய முன்வருவார்கள். ஆகவே, அங்கே அந்த ஆய்வு நடைபெற்று வருகிறது. அந்த ஆய்வின் அடிப்படையில், நிச்சயமாக அந்தப் பகுதியிலே காற்றாலைமூலம் மின் உற்பத்தி செய்வதற்கு வாய்ப்புகள் இருக்குமேயானால், தனியார்களே அந்தப் பகுதியில் போட்டி போட்டுக்கொண்டு முன்வருவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு சிவகங்கை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், சூரிய ஒளி மின் உற்பத்தி நிலையம் அமைப்பதற்கு நல்ல பொருத்தமான மாவட்டம் என்று கண்டறியப்பட்டிருக்கின்றது. ஆகவேதான் சிவகங்கை, இராமநாதபுரம், தூத்துக்குடி போன்ற பல்வேறு மாவட்டங்களில் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்ற சூரிய ஒளி மின் சக்தி 2012 கொள்கையின் அடிப்படையிலே, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் யூனிட் ஒன்றுக்கு 7 ரூபாய் 1 பைசா என்ற அளவிற்கு இப்போது

2015 பிப்ரவரி 18]

விலை நிர்ணயம் செய்திருக்கின்றது. ஆகவே, இன்றைக்குத் தனியார் யாராவது மின் உற்பத்தி செய்ய முன்வருவார்களேயானால், அவர்களிடமிருந்து மின்சாரத்தை யூனிட் ஒன்றிற்கு 7 ரூபாய் 1 பைசா என்ற அளவிலே கொள்முதல் செய்வதற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த வகையிலே சிவகங்கை மாவட்டத்தில் பல தனியார்கள் சூரிய ஒளி மின் சக்தி மூலமாக மின் உற்பத்தி செய்வதற்கு இப்பொழுது முன்வந்திருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மிக விரைவிலே அந்த மாவட்டத்திலே சூரிய ஒளி மின் சக்தித் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்; காற்றாலையைப் பொறுத்தளவில் மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின் அடிப்படையில் நடைபெறும் இந்த அரசு, ஆய்வின் அடிப்படையிலே உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய சிவகங்கை மாவட்டத்தில் சூரிய ஒளி மின் உற்பத்தி நிலையம் தொடங்கப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் நன்றியைக் கூறிக்கொள்கிறேன். கடந்த காலங்களில் இருண்ட மாநிலமாக இருந்த தமிழகத்தை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், அவர்களுடைய சாதுரியத்தால் மின் மிகை மாநிலமாக இன்று உருவாக்கிக் காட்டியிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் (மேசையைத் தட்டும் ஒலி) சிவகங்கை மாவட்டத்தில் சூரிய ஒளி மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். சிவகங்கை மாவட்டத்தில் சிறு மலைக் குன்றுகளும், அரசு நிலங்களும், புறம்போக்கு நிலங்களும் உள்ளன. ஆகவே, அப்பகுதிகளில் காற்றாலை மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு முன்வந்தால், அந்தப் பகுதிகள் மின்சாரம் பெற ஏதுவாக இருக்கும். அதேபோன்று தனியார் மின் உற்பத்தி செய்ய முன்வந்தால், அவர்களுக்கு மானியத்துடன் கூடிய உதவி செய்யப்படுமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடம் இருப்பதால் மட்டுமே அந்த இடத்திலே காற்றாலை மின்சார உற்பத்தியைத் தொடங்கிவிட முடியாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பகுதியிலே காற்றின் அழுத்தம், திசை, வேகம் இவையெல்லாம் கண்டறியப்பட வேண்டும். அந்த ஆய்வின் அடிப்படையில் அந்தப் பகுதிகளிலே காற்றாலை அமைப்பதற்கு வேண்டிய அளவிற்குக் காற்று வீசுமானால், காற்றின் அழுத்தம் இருக்குமானால், நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்ற அந்தப் பகுதிகளிலே, காற்றாலை அமைக்க வேண்டிய நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதை மீண்டும் ஒரு முறை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் காற்றாலைமூலம் எவ்வளவு மின்சக்தி பெறப்படுகிறது என்பதை அறிய விரும்புகின்றேன். ஏப்ரல், மே, ஜூன், ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் ஆகிய மாதங்கள் தென்மேற்கு பருவக் காற்று வீசும் சமயங்களாகும். திண்டுக்கல் மாவட்டம், தொப்பம்பட்டி ஒன்றியத்தில் அதிகமான காற்றாலைகள் நிறுவப்பட்டுள்ளன. ஆனால், அந்தக் காற்றாலை மின் உற்பத்தியை அடிக்கடி நிறுத்திவிடுகின்றார்கள். இதுபற்றிக் கேட்டால், மின் உற்பத்தியைப் பெறுவதற்குப் போதுமான கட்டமைப்பு வசதிகள் இல்லை என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்கள் என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.